உ
ஓம்
கணபதி துணை
சிவமயம்



யாழ்ப்பாணம் - பண்ணாகம்
சைவவேளாளர்குல
பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய
இளைப்பாறிய அதிபர்
திரு. செ. ஸ்ரீநிவாசன் அவர்களின்
அருமைத் துணைவி

# திருமதி பரமேஸ்வரி அவர்களின்

# நினைவு மலர்

## 21-9-83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நேரிசை ஆசிரியப்பா

இந்துமா சமுத்திரம் ஈன்றே எடுத்த
செந்தமிழ் விளங்கும் சீர்சேர் இலங்கை
நித்திலந் தவழும் இத்தீ வதனில்
புத்தொளிர் வுடையது புனிதயாழ்ப் பாணம்
யாழ்ப்பா ணத்தின் நவையறு கிராமம்
பாரோர் போற்றும் பண்ணா கம்தான்
பண்பும் நண்பும் பக்குவ நிலையும்
மெத்த வுடையோர் இங்குளா ரெல்லாம்
கல்வி செல்வம் கனிவுடன் அமைந்த
நற்குல னுதித்தார் சின்னத் தம்பி
அவரது அருமை மகனும் இளைய
தம்பியின் மைந்தன் தகும்மா ணிக்கம்
மலாயா தன்னில் மாண்புறு லிகிதர்
நம்நா டதனில் கிராமக் கோட்டு
நீதிச் சபையில் நியாயம் வழங்கினார்
பல்லோர் போற்றும் மாணிக் கம்தான்
அவ்வூ ருள்ள அருமைச் செல்வி
சபாபதிப் பிள்ளை நாகம் மாவை
நன்மணம் புரிந்து நலனாய் வாழ்ந்து
பதினேழு எட்டு இருபத்து மூன்று
வெள்ளிக் கிழமை விளங்குநன் னாளில்
ஏகபுத் திரியாய் எல்லோர்க்கும் இனிய
பரமேஸ் வரியைப் பாங்காய்ப் பெற்றனர்
பெற்றோர் உற்றோர் பெருமை கொள்ள
உற்ற நங்கை ஒளிர்ந்தவள் வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வூர் வாழும் அருமை மிகுந்த
செல்லப் பாவும் தங்கம் தானும்
கருத்துடன் பெற்ற கனிஷ்ட புத்திரன்
ஸ்ரீநி வாசனெனும் சிறப்புடை ஏந்தல்
சைவமும் தமிழும் தந்தமெய் கண்டான்
உயர்ந்துல கேத்த ஓங்கி வளர்த்தவர்
தாரகை நடுவண் தண்மதி போல
அதிபர ருள்ளே அணியாய் விளங்கினார்
பல்மா ணுக்கர் பாங்காய் உயர
அல்லும் பகலும் அயரா துழைத்தார்
கல்வியில் மிக்கார் கண்ணியம் உடையார்
நல்லோர் வல்லோர் சபையின் தலைவர்
இருமொழி வல்லுநர் இலங்குமா சிரியர்
தமது மத்தியில் தனிச்சிறப் புடையார்
இத்தகு நல்லான் ஏந்திழை மைத்துனன்
மெத்தவும் வதுவை முறையாய் அமைத்தனர்
செல்வமும் கல்வியும் சேர்ந்தே இலங்க
இல்லற மென்னும் நல்லற மாற்றினர்
அவர்தம் வாழ்வின் அன்பின் சின்னமாய்
அமைந்தவர் பராசத்தி சரவண பவனே
பராசக்தி தன்னை பாங்காய் மணந்தார்
கனகரத் தினமெனும் கருத்துடை விகிதர்
பரமேஸ் வரியெனும் பண்புடை நங்கை
உற்றார் பெற்றார் ஊரினில் உள்ளார்
அனைவர்க்கும் இனிய அன்பாய் இருந்தார்
கணவனே கண்கண்ட தெய்வமென் றெண்ணி
கடமைகள் புரிந்து கண்ணாய் வாழ்ந்தார்
இவ்வா றில்லறம் ஆற்றும் நாளில்
பொல்லா நோயும் புகுந்து வருத்த
பல்லாற் றானும் பாவை வருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலன் தனது பாசக் கயிற்றை
வீசியே பரமேஸ் வரியை அழைத்தான்
உற்றார் பெற்றார் ஊரில் உள்ளோர்
மற்று அன்பின் அருமைப் பிள்ளைகள்
கனவிலும் பிரியாக் கணவன் தானும்
அடித்தே அரற்றினர் அவள்பதம் பெற்றாள்
ஆண்டாண்டாக அழுதே புரளினும்
மாண்டார் மீண்டு வருமா றுளதோ
எனுந்திரு வாக்கை எண்ணி நாமும்
அம்மையின் ஆத்மா சாந்தி யடைய
விசவைப் பெருமான் வடக்கம் பரையாளை
நல்லூர்க் கந்தன் நாமம் துதிப்போம்
அவரைப் பிரிந்த அரிய குடும்பம்
சாந்தி யடைந்து நித்தம்
தாயினைப் போற்றித் தழைத்தே வாழ்க.

பண்டிதை பொன் பாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரவாழ்வெய்திய அம்மையார்

# திருமதி பரமேஸ்வரி ஸ்ரீநிவாசன்

அவர்கள்

## வரலாற்றுக் குறிப்புக்கள்

### உதயம்

யாழ்ப்பாணத்துப் பண்ணாகம் கிராமத்தில் வாழ்ந்த மாணிக்கம் நாகம்மா தம்பதிகளின் ஓரேயொரு அருமை மகளாக அம்மை பரமேஸ்வரி அவர்கள் 17 - 08 - 1923 இல் உதயம் செய்தார்கள்.

### தந்தையார் வழி

திரு. மாணிக்கம் அவர்களின் தந்தையார் வைத்தியர் இளைய தம்பி ஆவர். இளையதம்பிக்கு இவரோடு திருவாளர்கள் பொன்னையா, சின்னத்தம்பி என்னும் ஆண் மக்களும், திருமதி பொன்னம்மா ஆறுமுகம், திருமதி தங்கம்மா செல்லப்பா என்னும் பெண் மக்களும் உதித்தனர். திரு. இளையதம்பி மாணிக்கம் அவர்கள் உயர்கல்வி கற்றுமலாய்நாடு சென்று உயர்ந்த உத்தியோகம் வகித்து ஓய்வூதியம் பெற்று ஊராரின் நன்மதிப்புக்கு உரியவராக வாழ்ந்தவர். நேர்மையானவர். நீதி மான் எனப் புகழ் பெற்றவர்.

### தாயார் வழி

அம்மை பரமேஸ்வரி அவர்களின் தாயார் திருமதி நாகம்மா அவர்கள் திரு. சபாபதிப்பிள்ளை அவர்களின் மகளாவர். இவரோடும் உடன் பிறந்தோர் திருவாளர்கள் கணபதிப்பிள்ளை, சுந்தரம்பிள்ளை சம்பந்தமூர்த்தி என்னும் தமையன்மார் மூவரும், தமக்கையார் திருமதி மாரிமுத்து இராமலிங்கமும், தங்கையார் திருமதி அபிராமிப்பிள்ளை நடராசா அவர்களும் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மை பரமேஸ்வரியின் கல்வியும் திருமணவாழ்வும்

'வளரும் பயிரை முளையிலே தெரியும்' என்ற முதுமொழிக்கேற்ப செல்வி பரமேஸ்வரி அவர்கள் இளமையில் மிக்க அழகும் இனிய பண்பும் உடையவராகத் திகழ்ந்தார். பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திலே தமது ஆரம்பக் கல்வி, உயர் கல்வி அனைத்தையும் பெற்றார். இவர் தமது 12 ம் வயதில் அருமைத் தந்தையாரை இழந்து தாயாரின் பாதுகாப்பில் வாழ்ந்தார். 1941 ஆம் ஆண்டில் தமது தந்தையாரோடுடன் பிறந்த திருமதி தங்கம்மா தம்பதிகளின் தவப்புதல்வன் ஸ்ரீநிவாசன் அவர்களைத் திருமணம் செய்யும் பேறு பெற்றார்.

கணவர் ஸ்ரீநிவாசன் அவர்களின் தந்தையார் கணபதிப்பிள்ளை செல்லப்பா. அவரோடு உடன் பிறந்தோர் திருவாளர்கள் கிருஷ்ண பிள்ளை, சின்னத்துரை, கணபதிப்பிள்ளை என்னும் ஆண்மக்களும், திருமதி அன்னப்பிள்ளை சதாசிவம், திருமதி சின்னக்குட்டி அப்பாப்பிள்ளை, திருமதி இலைக்கொழுந்து சின்னத்துரை என்போரும் ஆவர். திரு. ஸ்ரீநிவாசன் அவர்கள் சுழியுரம் விக்ரோறியாக் கல்லூரியிற் படித்து கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையிற் சித்திபெற்று மலாய் நாடு சென்று மருத்துவக்கல்லூரியில் சேர்ந்து படித்தாராயினும் வசதிக் குறைவு காரணமாகப் படிப்பை இடைநிறுத்தி ஊருக்கு வந்து ஆசிரிய பயிற்சி பெற்று 1934 ம் ஆண்டில் மெய்கண்டான் பாடசாலையில் உதவி ஆசிரியராய்ச் சேவை யேற்றார். 1945 ஆம் ஆண்டில் மெய்கண்டான் அதிபராக நியமனம் பெற்றார். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற தாரக மந்திரத்தைக் கைக்கொண்டு சாதாரண மெய்கண்டானை மெய்கண்டான் உயர்தர பாடசாலையாகவும் பின் மகாவித்தியாலயம் ஆகவும் உயர்வு பெற வைத்தார். சைவ வித்தியாவிருத்திச் சங்கம் இவரைக் கௌரவித்த காரணத்தைப் பயன்படுத்திப் பலரை ஆசிரியர்களாக்கி அரும் பணி புரிந்தார். இந்தக் கிராமத்திலுள்ள ஆசிரியர்களில் பெரும்பாலோர் அவருடைய துணையால் பதவி பெற்றவர்கள். ஆசிரிய சங்கங்களில் தலைவராகவும் செயலாளராகவும் அமர்ந்து மிக்க புகழுடன் விளங்கியவர்கள். 1970 ம் ஆண்டில் ஓய்வூதியம் பெற்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு ஸ்ரீநிவாசன் பரமேஸ்வரி தம்பதிகளின் இல்லற வாழ்வில் திருமதி பராசக்தி கனகரத்தினமும், திரு. சரவணபவனும் மக்களாய் உதித்தனர். தந்தையரைப் போலவே திருமதி பராசக்தியும் இனிய பண்பும், பலவகை நன்மைகளும் உடையவர். அவருடைய கணவர் திரு. பெரியதம்பி கனகரத்தினம் அவர்கள் இலங்கைச் சுங்கப்பகுதி உத்தியோகத்தர்.

## அம்மை பரமேஸ்வரியின் இறுதிக்காலம்

சென்ற பல மாதங்களாக நோய்வாய்ப்பட்ட அம்மை பரமேஸ்வரி 21 - 8 - 83 இரவு 10 மணியளவில் வினைப்போகமாகிய தேகம் நீக்கப்பெற்றார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவர் மேலும் பிறவாத பேரின்பநிலை எய்தவும் பிரார்த்திக்கின்றோம், அவர் பிரிவால் தனித்துள்ள பெரியார் ஸ்ரீநிவாசன் அவர்களுக்கும் மக்களுக்கும் அனுதாபம் தெரிவிக்கின்றோம்.

வணக்கம்

பண்டிதர். அ. ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணுதலான் அடிசேர்ந்தாய் அடைகசாந்தி!

அடல்ஏறு என்னபெரு ஞானம் மிக்கு
ஆசிரியர் ஆசானுய்ப் பல்லாண் டாகத்
திடமுடனே பண்ணுகம் மெய்கண்டான்நற்
றீந்தமிழ்மா வித்யாலயம் சிறந்து வாழுக
கடமைபல செய்து யர்ந்தோன் ஸ்ரீநிவாசன்
கண்ணெனவே மனையாளாய் வாய்த்த செல்வி
மடமகளோ பரமேஸ்வரி அன்னுய் ஏனே
மண்ணுலகைத் துறந்திட்டாய் அடைக சாந்தி

தவநெறியில் வழுவாத தாயே என்றும்
தண்ணெளிசேர் கருணைஉளம் கொண்டு அன்பாய்
கவலைஎதும் இன்றிவரு நண்பர் போற்றி
கற்பகமாய் நின்றிட்டாய் குடும்பம் காத்தாய்
நவநிதியம் பற்பலவே சேர்த்து வைத்தாய்
நாடேத்த இல்லறத்தின் விளக்காய் நின்றுய்
பவமிக்க உலகெதற்காம் என்றே வாழ்வுப்
பற்றெழித்துப் பறந்திட்டாய் அடைக சாந்தி

மருவினிய கணவனொடு மக்கள் மருகன்
மாசில்லா நண்பரொடு சுற்றம் சோர்ந்து
அருவியென நீர்கண்ணல் வடித்து நிற்க
அம்மாநீ சென்றதெங்கே அலறுய் அந்தோ
இருநிலத்தில் செய்தஅறம் போதும் என்றே
இமையவர்வாழ் உலகதையும் வெறுத்து அப்பால்
கருங்கயலாள் காமாட்சி பாகன் எந்தை
கண்ணுதலான் அடிசேர்ந்தாய் அடைக சாந்தி!

ஆசிரியர் ஸ்ரீநிவாசனின்
அன்பு மாணவன்
கா. வேல்முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அம்மையாரை
## நினைவு கொள்வோம்"

நேர்மை, ஒழுக்கம், பதிவிரதையாக வாழ்ந்து அமரரான செ. ஸ்ரீநிவாசன் மனைவி பரமேஸ்வரி அம்மையார் பண்ணாகம் விசவத்தனை முருகன் மேல் அளவிறந்த பக்தியுடையவராக வந்ததை நாம் யாவரும் நன்கு அறிவோம். அம்மையார் இறக்கும் நேரத்திலும் முருகன் நாமத்தை கூறிக் கொண்டிருந்ததாக அன்பர்கள் வாயிலாக அறிகின்றோம். அம்மையார் முருகன் பாதத்தை அடைந்து மறுபிறவி பெற்றுள்ளார். இதை யாவரும் நம்புவோம். அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய விசவத்தனை முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

க. வாமதேவன்
செயலாளர்
"பஜனைச் சபையினர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

ஸ்ரீகயிலாயம்

# போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழி யேழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்கள் குடும்பத் தலைவியின் நினைவாக வெளியிடப்படும் இச் சிறு மலருக்கு விஷயங்கள் வழங்கிய அன்பருக்கும் அனுதாபச் செய்திகள், பொருளாதார உதவிகள் அனுப்பிய உறவினர் நண்பர்களுக்கும், மரணச்சடங்கில் கலந்து உதவி புரிந்து அன்பு காட்டியவர்களுக்கும் மற்றும் பெரியாருக்கும் எமது கிராமத்தின் பண்பிற்கேற்ப தமது உடலுழைப்பை அளித்து கடும் வெயிலையும் பொருட்படுத்தாது மயானம் வரை திரளாக வந்த எம்மூர் வாலிப வீரர்களுக்கும் பெரியோருக்கும் மற்றும் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்:

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த நெருக்கடியான காலத்தில் இம் மலரை மனமுவந்து சிறப்புற அச்சிட்டு வழங்கிய அச்சகத்தாருக்கு யாம் என்றும் கடமைப் பாடுடையோம்.

செ. ஸ்ரீநிவாசன்

ஸ்ரீ. சரவணபவன் (மகன்)

பெ. கனகரத்தினம் (மருமகன்)

க. பராசக்தி (மகள்)

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர வாழ்வெய்திய அம்மை



# திருமதி ஸ்ரீநிவாசன் பரமேஸ்வரி

தோற்றம்:
17 - 8 - 1923

மறைவு:
22 - 8 - 1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org